



# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

DHINA TAMIL

RNI No : TNTAM/2023/85936






www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 21.03.2026 • மலர் 04 • இதழ்: 79 • Edition : Nagercoil • 21.03.2026 • Vol : 04 • Issue : 79 • Page : 4 • Rs. 5/-


## எதிர்க்கட்சியினர் டெல்லியில் முகாமிட்டிருப்பது

# மக்கள் நலனுக்காகவா...?

### மு.க.ஸ்டாலின் கேள்வி



சென்னை, மார்ச். 21

தமிழ்நாடு முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:

தமிழ்நாடு vs டெல்லி என்பது நிரூபணம்!

எதிர்க்கட்சியினர் டெல்லியில் முகாமிட்டிருப்பது மக்கள் நலனுக்காகவா?

தேர்தல் களத்தை எதிர்கொள்வதற்கான முடிவுகளைக்கூட டெல்லியே எடுக்கும் நிலை. இனி, டெல்லியின் முடிவே அவர்களது முடிவு!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தனது மற்றொரு பதிவில், "ஒவ்வொருநாளும் 9 மணி நேரத்திற்கும் மேலாக நேர்காணல் நடத்தி,

ஆயிரக்கணக்கான உடன்பிறப்புகளைச் சந்திப்பதே எனது உற்சாகத்தை அதிகரித்துள்ளது. நமது திராவிட மாடல் ஆட்சியில் தங்கள் தொகுதி அடைந்திருக்கும் வளர்ச்சி பற்றியும், நம் சாதனைத் திட்டங்களுக்கு இருக்கும் வரவேற்பு பற்றியும் ஒவ்வொருவரும் மிகுந்த நம்பிக்கையுடன் விவரிக்கின்றனர்.

நேர்காணலுக்கு வரும் உடன்பிறப்புகள் மட்டுமல்ல, நீங்களும் உங்களின் கருத்துகளை முன்வையுங்கள்.. உங்கள் கருத்துகளில் இருந்து கிடைக்கும் insights, #DravidianModel 2.0வுக்கு அடித்தளமாகட்டும்!" என்று முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.




## தொகுதி பங்கீடு: அமித்ஷாவை சந்திக்க டெல்லி புறப்பட்டார்

### அன்புமணி ராமதாஸ்



சென்னை, மார்ச். 21

தமிழகத்தில் அடுத்த மாதம் 23ந்தேதி தேர்தல் நடைபெற உள்ளது. இந்த தேர்தலை அதிமுக, பாஜக, அமமுக, பாமக கட்சிகள் ஒன்றுசேர்ந்து சந்திக்கிறது. தற்போது தொகுதி பங்கீடு தொடர்பாக கட்சிகளிடையே பேச்சுவார்த்தை நடைபெற்று வருகிறது.

இதற்கிடையே, அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நேற்று டெல்லி சென்றார். அங்கு அமித்ஷாவை சந்தித்த அவர், தொகுதி பங்கீடு தொடர்பாக பேச்சு வார்த்தை நடத்தினார். தொடர்ந்து, அமமுக பொதுச்செயலாளர் டிடிவி தினகரன் மற்றும் பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் இன்று டெல்லிக்கு பயணம் செய்கின்றனர்.

இந்த நிலையில், பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் இன்று சென்னையில் இருந்து டெல்லி சென்றுள்ளார். டிடிவி தினகரனும் காலை 11 மணிக்கு டெல்லி செல்ல உள்ளார். கூட்டணியில் தங்களுக்கான தொகுதிப் பங்கீடு குறித்து அமித்ஷா உடன் ஆலோசனை நடத்த உள்ளனர்.

## துரைமுருகனுக்கு இனி அமைச்சர் பதவி கிடையாதா?

### தி.மு.க.வில் பரபரப்பு



சென்னை, மார்ச். 21

தி.மு.க. பொதுச்செயலாளரும், நீர்வளத் துறை அமைச்சருமான துரைமுருகனுக்கு 87 வயது ஆகிறது. சமீபத்தில் வீட்டில் கீழே விழுந்த அவருக்கு முதுகு எலும்பில் காயம் ஏற்பட்டு, மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். நீண்ட நாட்களாக ஓய்வில் இருந்த அவர், சமீபத்தில் நடந்த தி.மு.க. மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தில் கலந்துகொண்டார்.

அவருடைய வயோதிகம் மற்றும் உடல்நலக்குறைவை காரணம் காட்டி, இந்த முறை சட்டசபை தேர்தலில் அமைச்சர் துரைமுருகனுக்கு போட்டியிட வாய்ப்பு வழங்கப்படாது என்ற தகவல் தி.மு.க. வட்டாரத்தில் பரவியது. ஏற்கனவே, 4 அமைச்சர்களுக்கு சீட் கிடையாது என்று கூறப்பட்டு வரும் நிலையில், இந்த தகவல் மேலும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்த நிலையில், அமைச்சர் துரைமுருகனை துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசியுள்ளார். அப்போது, தேர்தலில் போட்டியிடும் தனது விருப்பத்தைதுரைமுருகன் அவரிடம் தெரிவித்துள்ளார். இதுவரை ராணிப்பேட்டைமற்றும்காட்பாடி தொகுதியில் இருந்து 10 முறை சட்டமன்றத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள துரைமுருகன், 1996ம் ஆண்டு முதல் தொடர்ந்து வெற்றி பெற்று வந்துள்ளார். தி.மு.க. ஆட்சி காலத்தில் பலமுறை அமைச்சராகவும் இருந்துள்ளார். எனினும், கடந்த (2021) தேர்தலில் 1000 வாக்குகளுக்கும் குறைவான வித்தியாசத்திலேயே காட்பாடி தொகுதியில் வெற்றி பெற்றார்.

நீண்ட நெடுங்காலம் அமைச்சராக இருந்துவரும் துரைமுருகனுக்கு இந்த முறை போட்டியிட சீட் வழங்கப்படாது என்ற தகவல் தி.மு.க. வட்டாரத்தில் பரபரப்பை ஏற்படுத்தியது. துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் சந்தித்து பேசிய நிலையில், கடைசியாக இந்த ஒரு முறை மட்டும் அவருக்கு தேர்தலில் போட்டியிட வாய்ப்பு வழங்கப்படும் என்று தெரிகிறது.

எனினும், தி.மு.க. வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும் பட்சத்தில், அமைச்சர் பதவி எதுவும் அவருக்கு வழங்கப்படாது என்றும் கூறப்படுகிறது. இதுகுறித்த தகவல் துரைமுருகனிடம் தெரிவிக்கப்பட்டபோதும், அவரிடம் இருந்து எந்த பதிலும் வெளியாகவில்லை என்று கூறப்படுகிறது.

## கனிம வளங்களை பாதுகாக்கத்தானே கனிம வளத்துறை..?

### தவெக அருண்ராஜ் கேள்வி



சென்னை, மார்ச். 21

தமிழக வெற்றிக் கழகத்தின் கொள்கை பரப்பு செயலாளர் அருண்ராஜ் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில் தெரிவித்திருப்பதாவது:

கனிம வள மாஃபியாக்கள் ராஜ்ஜியம் நடக்கிறதா? கொள்ளை ஆட்சியை விரட்டியடிப்போம்.

சேலம் மாநகர் ரெட்டியூர் பகுதியில் சட்டவிரோதமாக கனிம வளங்கள் வெட்டி கடத்தப்படுவது குறித்த தொலைக்காட்சி செய்தி அதிர்ச்சி அளிக்கிறது.

தினமும் 50க்கும் மேற்பட்ட லாரிகளில் கனிம வளங்கள் கொண்டு செல்லப்படுவது குறித்து புகார் கூறிய பின்னரும் சேலம் மாவட்ட கனிமவளத்துறை நடவடிக்கை எடுக்காமல் வேடிக்கை பார்ப்பது வெட்கக்கேடு.

கனிம வளங்களை பாதுகாக்கத்தானே கனிம வளத்துறை..? அல்லது கமிஷன் வாங்கிக்கொண்டு கமுக்கமாக இருக்கவா..?

திமுக ஆட்சிக்கு வந்ததில் இருந்தே சேலம் மாவட்டத்தில் கனிம வளக் கொள்ளை பெருகி விட்டது. மலைகள் வெட்டப்படுவதும், மண் கடத்தப்படுவதும் வாடிக்கையாகி விட்டது. கேள்வி கேட்க யாரும் இல்லை என்ற தைரியத்தில் தான் கனிம வள மாபியாக்கள் சுதந்திரமாக நடமாடி வருகின்றனர்.

கனிம வளங்களை கொள்ளையடித்து கோடி கோடியாக சம்பாதிப்பவர்களுக்கு, துணையாக இருக்கிறது திமுக அரசு. ஏனென்றால் மணல் குவாரி, கல் குவாரி நடத்தும் பெரும்பாலானவர்கள் திமுகவினர்தான்.

மக்களைதவிரமற்ற எல்லாசமூகவிரோதிகளுக்கும் திமுகஆட்சியில்சிவப்புகம்பளம்விரிக்கப்படுகிறது.! இப்படிப்பட்ட மோசமான ஆட்சிக்கு ஏப்ரல் மாதம் மொத்தமாக முடிவு கட்டப்படும்.!

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கேரளாவுக்கு கனரக லாரிகளில் கடத்த ரூ.200 கோடி கற்கள் குவித்து வைப்பா?

### ஆய்வு செய்ய மதுரை ஐகோர்ட்டு உத்தரவு

மதுரை, மார்ச். 21

கன்னியாகுமரி மாவட்டம் திருவட்டார் தாலுகா புத்தன்கடை பகுதியைச் சேர்ந்த சுரேஷ், மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:

நெல்லை மாவட்டம் ராதாபுரம் மற்றும் இருக்கன்துறை ஆகிய பகுதிகளில் கல்குவாரி மற்றும் கிரஷர்கள் இயங்குகின்றன. அங்கிருந்து கனிம வளங்களை கொண்டு செல்வதில் பல்வேறு முறைகேடுகள் நடக்கின்றன. அதாவது குவாரியில் இருந்து கற்களை அனுமதியின்றி கேரளாவுக்கு நாள்தோறும் ஏற்றி செல்கிறார்கள். அதுமட்டுமில்லாமல் இந்த பகுதியில் சட்டவிரோதமாக 5 லட்சம் டன் கற்களை வெட்டி எடுத்து கேரளாவுக்கு கடத்த குவித்து வைத்துள்ளனர். இதன் மதிப்பு சுமார் ரூ.200 கோடி. இதன் மூலம் அரசுக்கு பெரும் இழப்பு ஏற்படுகிறது. கனரக லாரிகளில் கற்கள் கொண்டு செல்வதற்கான பாஸ் பெறுவதிலும் முறைகேடுகள் நடக்கின்றன. இதன்மூலம் இப்பகுதி வளங்கள் அழிக்கப்படுவது ஏற்புடையதல்ல. எனவே சட்டவிரோதமாக கற்களை வெட்டி எடுப்பதற்கும் அவற்றை அனுமதியின்றி கொண்டு செல்வதற்கும் தடை விதித்து உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறியிருந்தார்.

இந்த வழக்கு நீதிபதிகள் சதீஷ்குமார், ஜோதிராமன் ஆகியோர் முன்பு விசாரணைக்கு வந்தது. அப்போது மனுதாரர் சார்பில் வக்கீல் விவேக்குமார் ஆஜராகி, குவாரியில் இருந்து தமிழகத்தின் பல பகுதிகளுக்கு கற்கள் ஏற்றி செல்வதாக அனுமதிபெற்று விட்டு கேரளாவுக்கு கடத்துவது சட்டவிரோதம் என தெரி வித்தார். ஆனால் குறிப்பிட்ட பகுதியில் தற்போது எந்தவிதமான குவாரி பணிகளும் நடைபெறவில்லை என்று அரசு வக்கீல் தெரிவித்தார். இதனை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு: தனியார் நிறுவனத்துக்கு கற்களை கொண்டு செல்வதற்காக வழங்கப்பட்ட போக்குவரத்து அனுமதிச்சீட்டுகளை சட்டவிரோதமாக பயன்படுத்துகின்றனர். இதன்மூலம் நாள்தோறும் 16 சக்கரங்களை கொண்ட 60 கனரக லாரிகளில் பல நூறு டன் கற்களை கேரள மாநிலத்திற்கு கடத்தி செல்வதை தடுக்க வேண்டும் என மனுதாரர் கூறியுள்ளார். மேலும் குவாரி உரிமம் 2022ம் ஆண்டிலேயே காலாவதியாகிவிட்டது எனவும் கூறப்படுகிறது. இருப்பினும் மனுதாரர் சமர்ப்பித்த புகைப்படங்களை பார்க்கும் போது கற்களை வெட்டி எடுக்கும் பணி தொடர்ந்து நடக்கிறது என்பதை காட்டுகின்றன. இதுதொடர்பாக நேரில் ஆய்வு செய்வதற்கு வக்கீல் கமிஷனராக முகமது முகைதீன் என்ற வக்கீல் நியமிக்கப்படுகி றார். அவர் கனிமவளத்துறை அதிகாரிகளுடன் இணைந்து சம்பந்தப்பட்ட பகுதியில் ஆய்வு நடத்தி வீடியோ, புகைப்படங்களை எடுத்து இந்த கோர்ட்டில் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். தேவைப்பட்டால் போலீசார் பாதுகாப்பு வழங்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டு, விசாரணையை வருகிற 26ந்தேதிக்கு ஒத்திவைத்தனர்.

## பால்வாடி இயக்கத்திற்கு பவளவிழா இயக்கம் பாடம் புகட்டும்

### அமைச்சர் சேகர்பாபு



சென்னை, மார்ச். 21

அமைச்சர் சேகர்பாபு சென்னையில் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது தவெகவை அவர் மறைமுகமாக விமர்சித்தார். இது தொடர்பாக அவர் பேசியதாவது;

"எங்களை பொறுத்த வரை, நாங்கள் யாரையுமே சவாலாக நினைப்பதில்லை. மக்கள் பணிகளை மையப்படுத்தி மட்டுமே தேர்தல் களத்தில் இருக்கிறோம். பேய், பிசாசு, பூச்சாண்டிகளுக்கு பயப்படும் இயக்கம் திமுக அல்ல. உண்மையான மக்கள் சக்தி, முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பின்னால்தான் உள்ளது. மக்கள் சக்தி யார் பின்னால் உள்ளது என்பதை வருகிற தேர்தல் நிரூபிக்கும். எங்கள் முன்பு அமர்ந்து பேசக்கூட தயங்கியவர்கள் எங்களிடம் சவால் விடுகின்றனர். கூவிக்கூவி அழைத்தும், அவர்களுடன்கூட்டணிக்கு யாரும் வரவில்லை. களத்திலே கண்ணுக்கெட்டிய தூரம் வரை திமுகவை எதிர்க்கின்ற சக்தி எந்த கட்சிக்கும் இல்லை. திமுக கூட்டணி வலுவானது. பால்வாடி இயக்கத்திற்கு பவளவிழா இயக்கம் பாடம் புகட்டும்." இவ்வாறு அவர் பேசினார்.

## சேலம் விபத்து: குடும்பத்தினருக்கு உரிய நிவாரணம் வழங்க வேண்டும்

### அண்ணாமலை வேண்டுகோள்

சென்னை, மார்ச். 21

தமிழக முன்னாள் பாஜக தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில், சேலம் அருகே அரியானூரில், அரசுப் பேருந்து விபத்துக்குள்ளானதில், 5 பேர் உயிரிழந்த செய்தி மிகுந்த வருத்தமளிக்கிறது. உயிரிழந்தவர்கள் குடும்பத்தினருக்கு, ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

விபத்தில் காயமடைந்தவர்களுக்கு, உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்றும், இறந்தவர்கள் குடும்பத்தினருக்கு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் திமுக அரசை கேட்டுக் கொள்கிறேன். என தெரிவித்துள்ளார்.

## வணிக கியாஸ் தட்டுப்பாடு: சென்னை ஓட்டல்களில் உணவு விலை 20 சதவீதம் உயர்வு



சென்னை, மார்ச். 21

மேற்கு ஆசியாவில் நிலவிவரும் போர் பதற்றம் காரணமாக, இந்தியாவுக்கான கச்சா எண்ணெய் மற்றும் கியாஸ் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், வணிக கியாஸ் சிலிண்டர்கள் சப்ளை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளன. இதனால், பெரும்பாலான ஓட்டல்களில் உணவு வகைகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்டுள்ளன. விதவிதமான சைடிஸ்கள் இப்போது வழங்கப்படுவது இல்லை. பல ஓட்டல்களில் விறகு மற்றும் மின்சார அடுப்புகள் மூலம் உணவு தயாரிக்கப்பட்டு வருகின்றது.

என்றாலும், கள்ளச்சந்தையில் வணிக பயன்பாடு கியாஸ் சிலிண்டர்கள் ரூ.5 ஆயிரம் முதல் ரூ.8 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. விறகு அடுப்புக்கு வசதியில்லாத பல ஓட்டல்கள் வேறு வழியில்லாமல் அதிக விலை கொடுத்தே வணிக கியாஸ் சிலிண்டர்களை வாங்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால், சென்னையில் உள்ள ஓட்டல்களில் உணவு வகைகள் விலை 20 சதவீதம் அளவுக்கு உயர்த்தப்பட்டுள்ளது. ராயப்பேட்டையில் உள்ள ஒரு ஓட்டலில், 20 சதவீத விலை உயர்வு குறித்து ரசீதில் தனியாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கு, சமையல் எரிவாயு சிலிண்டர் மற்றும் இதர பொருட்களின் விலை உயர்வு காரணமாக கூறப்பட்டுள்ளது. மேலும், வாடிக்கையாளர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்திற்கு வருந்துகிறோம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த விலை உயர்வு, வணிக கியாஸ் சிலிண்டர் வினியோகம் சீராகும் வரை அமலில் இருக்கும் என்றும் தெரிகிறது.


தின தமிழ்

நிருபர்கள் தேவை

வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக

தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தின தமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை

தகுதிகள்

குற்றவழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்

மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்

99944 66200 – 70102 64701

## திருப்பூர் திமுக மத்திய மாவட்ட சார்பில்

# நோன்பு திறக்கும் நிகழ்ச்சி



திருப்பூர்:மார்ச் 21

இஸ்லாமியர்களின் புனிதமான மாதமான ரம்ஜான் மாதத்தை முன்னிட்டு இஸ்லாமியர்கள்நோன்புநோற்று வருகின்றனர். மேலும் சமூக நல்லிணக்கத்தை வெளிப்படுத்தும் வகையில் அனைத்து சமுதாய மக்களுடன் சேர்ந்து நோன்பு திறக்கும் நிகழ்ச்சியை நடத்தி வருகின்றனர்.

திருப்பூர் மத்திய மாவட்ட திமுக சார்பில் பெரிய தோட்டம் வீதியில் 1000 பேர் பங்கேற்ற நோன்பு திறப்பு விழா மத்திய மாவட்ட செயலாளர் தெற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் க.செல்வராஜ் எம்எல்ஏ வழிகாட்டுதலின்படி நடைபெற்றது. இதில் தெற்கு மாநகர செயலாளர் டி .கே .டி நாகராஜ். பகுதி செயலாளர் உசேன். மாநகர மாணவரணி அமைப்பாளர் செ .திலகராஜ். கழக பொதுக்குழு உறுப்பினர்கள் மஸ்ஊது. சலீம்(எ) அப்துல் ரகுமான். கவுன்சிலர் பெனாசீர் நசுருதீன் உள்ளிட்ட அனைத்து பள்ளிவாசல் தலைவர்கள். திமுக தலைமையிலான கூட்டணி கட்சி நிர்வாகிகள் பொதுமக்கள் பங்கேற்றனர்...




தருமபுரி அரசு கலைக் கல்லூரிவளாகத்தில் தமிழ்நாடு சட்டமன்ற பொது தேர்தல் 2026 முன்னிட்டு தேர்தலில் 100% வாக்களிப்போம் உறுதிமொழி மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் சதீஷ் தலைமையில் ஏற்றுக் கொள்ளப்பட்டது. இதில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகாமை திட்ட இயக்குனர் ரூபன் சங்கர்ராஜ், மகளிர் திட்ட அலுவலர் சுந்தர்ராஜன், தேர்தல் நடத்தும் அலுவலர் காயத்ரி, செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் லோகநாதன், வட்டாட்சியர் சுகுமார் உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர்.

## திருச்சியில்

# திருவானைக்காவல் பங்குனி தேரோட்டம்



திருச்சி, மார்ச். 21

திருச்சி திருவானைக்காவல் ஜம்புகேஸ்வரர்அகிலாண்டேஸ்வரி கோயிலில் ஆண்டுதோறும் நடைபெறும் 48 நாள் மண்டல பிரம்மோற்சவ விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (மார்ச் 20) அதிகாலை நடைபெற்றது. உற்சவர் ஜம்புகேஸ்வரர் பெரிய தேரிலும், அகிலாண்டேஸ்வரி அம்மன் மற்றொருதேரிலும்எழுந்தருளினர்.காலை8.05மணிக்கு பக்தர்கள்வடம்பிடித்துஜம்புகேஸ்வரர்தேரைஇழுத்துச் சென்றனர். இந்த திருவிழா கடந்த மாதம் 24ஆம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது

## திருப்பூரில்

# துணி, நூல் வர்த்தக கண்காட்சி துவக்கம்



திருப்பூர்: மார்ச்21

மூன்று நாட்கள் நடைபெறும் கண்காட்சியில் பிளாஸ்டிக் பெட் பாட்டிலில் இருந்து தயாரிக்கப்படும் பாலியஸ்டர் துணிகள் ,82 வகையான பாலியஸ்டர் நூல்கள், அலங்கார ஜவுளி பொருட்கள்காட்சிப் படுத்தப்பட்டுள்ளன.

திருப்பூர் பழங்கரையில் உள்ளஇந்தியபின்னலாடை கண்காட்சி வளாகத்தில் விஷன் கம்யூனிகேஷன் நிறுவனம் சார்பில் பின்னலாடை உற்பத்தியாளர்கள் பயன்பெறும் வகையில் துணி, நூல் மற்றும் அசசரிஸ் வர்த்தக கண்காட்சி இன்று துவங்கியது வருகிற 21ம் தேதி வரை மூன்று நாட்கள் நடைபெறும் இந்த கண்காட்சியில் நூற்றுக்கும் மேற்பட்ட அரங்குகளில் பாலிஸ்டர் பைபர்,துணி,நூல், பட்டன், லேஸ் உள்ளிட்ட அசசரிஸ்,அலங்கார ஜவுளி பொருட்கள் என பல முன்னணி நிறுவனங்கள் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ளது,

இந்த கண்காட்சியில் ஜவுளி துறைக்கான புதுவகை நூலிழைகள், நிலத்தடி நீரை பாழ்படுத்தும் பிளாஸ்டிக் பெட் பாட்டில்களைச் சேகரித்து, சுத்தம் செய்து, துகள்களாக்கி, உருக்கி பாலியஸ்டர்துணிகளாக மறுசுழற்சி செய்து அதிலிருந்து பாலிஸ்டர்பைபர், இசி பிட் எனும் ஏஐதொழில்நுட்பத்துடன்கூடியசெயலி, அதி நவீனஜவுளி அலங்காரபொருட்கள், 85 வகையான நூல்கள் இந்த நூல் ஜவுளி கண்காட்சியில் காட்சிப்படுத்தியுள்ளன. இந்த கண்காட்சியை ஏராளமான பின்னலாடை ஏற்றுமதியாளர்கள், நூல் உற்பத்தியாளர்கள்,துணி வர்த்தகர்கள் திரளாக பார்வையிட்டு வருகின்றனர்.

இது குறித்து கண்காட்சியில் தங்களது தயாரிப்புகளை காட்சிப்படுத்தியுள்ள டெல்லியை சேர்ந்த நிறுவனத்தின் பொறுப்பாளர் கூறுகையில் . தங்களது தொழிற்சாலைகள் பிளாஸ்டிக் கழிவுகளை பயனுள்ள மூலப்பொருளாக மாற்றுவதன் மூலம் வட்டப் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பை வழங்குவதுடன் இத்தகைய மறுசுழற்சி மூலம் சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஏற்படுத்துகிறது, பிளாஸ்டிக்கழிவுகள்குறைக்கப்படுகின்றன, நிலப்பரப்பு மாசுபாடு தவிர்க்கப்படுகிறது

## கிருஷ்ணகிரி மாவட்டம் மேட்டுப்பட்டியில்

# மாவட்ட அளவில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி



கிருஷ்ணகிரி, மார்ச். 21

கிருஷ்ணகிரி மாவட்டம் காவேரிப்பட்டினம் ஒன்றியம் மிட்ட ஹள்ளி ஊராட்சி உட்பட்ட மேட்டுப்பட்டி கிராமத்தில் யுவராஜ் பிரதர்ஸ் சார்பில் 7 ம் ஆண்டு கிரிக்கெட் போட்டியை நடத்துகிறதுமாவட்ட அளவில் நடத்தப்பட உள்ள இந்த கிரிக்கெட் போட்டியில் கிருஷ்ணகிரி, காவேரிப்பட்டினம். கூரப்பட்டி, ஊத்தங்கரை என மாவட்டத்தின் பல்வேறு இடங்களில்இருந்து ஏராளமானகிரிக்கெட் அணிகள் இப்போட்டியில் கலந்துக் கொள்ள உள்ளது. நாக் அவுட் என்ற அடிப்படையில் நடைப்பெற உள்ள இந்தப் போட்டியை காங்கிரஸ் கட்சியின் பொதுத் குழு உறுப்பினரும், முன்னாள் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவரும் முன்னாள் மிட்ட ஹள்ளி ஊராட்சி மன்றத் தலைவருமான எல் .சுப்பிரமணியன் சிற ப்பு அழைப்பாளராக கலந்துக் கொண்டு கிரிக்கெட் போட்டிகளை துவக்கி வைத்து கிரிக்கெட் வீரர்களை கௌவித்தார். மேலும் 3 நாள்கள் நடைப் பெறும் இந்த கிரிக்கட் போட்டியில் வெற்றிப் பெறும் அணிகளுக்கு ஊக்கப்பரிசுகளும் , சுழல் கோப்பையும் வழங்கப் பட உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மின்கம்பத்திலிருந்து கீழே விழுந்து மின்வாரிய ஊழியர் படுகாயம்!



அருமனை : மார்ச் 21

ஆறுகாணி அருகே அணைமுகம் பகுதியில் மரம் முறிப்பதற்காக மின்கம்பிகள் அவிழ்த்து விடும் பணியில் களியல் மின்வாரிய ஊழியர் மகேஷ் ஈடுபட்டிருந்தார். அப்பொழுது திடீரென மின்கம்பம் உடைந்து கீழே விழுந்ததில் அவரது தலை அருகில் இருந்த சுவரில் மோதியதில் படுகாயம் அடைந்துள்ளார். உடனே அப்பகுதி மக்கள் அவரை மீட்டு திருவனந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.

தற்போது அவருக்கு தீவிர சிகிச்சை வழங்கப்பட்டு வருகிறது.

## தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில்

# சட்டமன்ற தொகுதி பேரவை கூட்டம்



தருமபுரி மார்ச் 21

தருமபுரி மாவட்ட இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் 2026 ம் ஆண்டு தருமபுரி சட்டமன்ற தொகுதி பேரவை கூட்டம் வன்னியர் திருமண மண்டபத்தில் மாவட்ட செயலாளர் ஜெ. பிரதாபன் தலைமையில் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் மாவட்ட செயலாளர் பிரபாகரன் பேசுகையில் வருகின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் அனைத்து தொகுதிகளிலும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவு பெற்ற வேட்பாளர்களை வெற்றி பெற செய்ய அனைத்து நிலை நிர்வாகிகளும் உறுதுணையாக இருக்க வேண்டும், . ஈரானில் போர் நடைபெறுவதால் இந்தியாவில் கச்சா எண்ணெய் விலை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. தொழிலாளர்களின் 44 சட்டங்கள் திருத்தி அமைக்கப்பட்டுள்ளது . இந்த கூட்டத்தில் மாவட்ட துணைச் செயலாளர்கள்ஜி. மாதையன், சி. பாலன், மாவட்ட பொருளாளர் அலமேலு , மாவட்ட நிர்வாக குழு ரவி, பச்சா கவுண்டர் மற்றும் கட்சி நிர்வாகிகள், உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.

## ஊத்தங்கரை அடுத்த பெருமாள் நாயக்கன்பட்டியில்

# விசிக நிர்வாகிகள் அம்பேத்கர் சிலைக்கு மாலை அணிவிப்பு



ஊத்தங்கரை மார்ச்:21

விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் சிதம்பரம் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல் திருமாவளவன் அவர்கள் வெளியிட்டுள்ள அறிக்கையில் ஊத்தங்கரை அடுத்த பெருமாள்நாயக்கன் பட்டி கிராமத்தைச் சார்ந்த தொழிலதிபர் பழனிச்சாமி அவர்களுக்கு கட்சியின் தொழிலாளர் விடுதலை முன்னணி மாநில செயலாளராக நியமனம் செய்து அறிவிப்பு செய்துள்ளார், இந்த நிலையில் பெருமாள் நாயக்கம்பட்டடியில் உள்ள புரட்சியாளர் அம்பேத்கர் சிலைக்கு தொழிலாளர் விடுதலை முன்னணியின் மாநில செயலாளர் பழனிச்சாமி மாலை அணிவித்து மரியாதை செய்தார், நிகழ்ச்சிக்கு கட்சியின் கிருஷ்ணகிரி மண்டல பொது நிர்வாக துணை செயலாளர்ஜிம்மோகன், இளஞ்சிறுத்தைஎழுச்சி பாசறையின் மாநில செயலாளர் வழக்கறிஞர் சங்கத்தமிழ் சரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர், முன்னதாக ஊர் பொதுமக்கள் பட்டாசு வெடித்து மேள தாள முழங்க வான வேடிக்கை இனிப்புகள் வழங்கி கொண்டாடினர்,அப்பொழுது விசிக நிர்வாகிகள் திருப்பதி, பட்டாபி, குயில் தாஸ், எம்,முருகேசன். திருக்கலை,கோகுல கண்ணன்,கவி,மனோஜ்,கமல்,சுபாஷ், ஊர் நாட்டாமை திருமயில்,எம்,குமார், மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்,

# விஜய் வசந்த் எம்.பி ரம்ஜான் வாழ்த்து



நாகர்கோவில்
மார்ச் 21

கன்னியாகுமரி பாராளுமன்ற உறுப்பினர் விஜய் வசந்த் வெளியிட்டுள்ள ரம்ஜான் வாழ்த்துச் செய்தியில் கூறியிருப்பதாவது: புனித நோன்பின் நிறைவை குறிக்கும் இந்த புனித நாளில் சகோதர சகோதரிகளுக்கு எனது இதயம் கனிந்த ரம்ஜான் நல்வாழ்த்துக்கள்.

தியாகம், பொறுமை, கட்டுப்பாடு மற்றும் கருணை ஆகிய உயர்ந்த பண்புகளை நமக்குள் வளர்த்தெடுக்க வழி காட்டும் இந்த புனித காலம், மனித நேயத்தின் உண்மையானஅர்த்தத்தைநமக்குநினைவூட்டுகிறது.

ரம்ஜான் மாதம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்ட நோன்பும் தொழுகையும், நம் உள்ளங்களை சுத்திகரித்து, சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தியுள்ளது. பசியின் வேதனையை அறிவதன் மூலம், அண்டை அயலாரின் துயரங்களை புரிந்து கொள்ளும் மனப்பான்மையை இது உருவாக்குகிறது. உதவி தேவைப்படுவோருக்கு கரம் நீட்டும் மனம், பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி காணும் பண்பு இவை அனைத்தும் இந்த பண்டிகையின் பெருமைமிகு செய்தியாகும்.

நபிகள் நாயகம் அவர்கள் போதித்த மனிதநேயத்தின் உயரிய மதிப்புகள் இன்றும் நமக்கு வழிகாட்டுகின்றன. “உங்களுள் சிறந்தவர் மற்றவர்களுக்கு நன்மை செய்பவரே” என்ற அவரின் போதனை, சமூக ஒற்றுமை மற்றும் சேவை மனப்பான்மையின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கிறது. அந்த உயர்ந்த வழிகாட்டுதல்களை நம் தினசரி வாழ்வில் கடைப்பிடிப்பதன் மூலம், நல்லிணக்கமான மற்றும் நீதியுள்ள சமூகத்தை உருவாக்க முடியும்.

இந்த மகிழ்ச்சியான நாளில், அனைவரின் வீடுகளிலும் சந்தோஷமும் சமாதானமும் நிலைத்திருக்கட்டும். நம் சமூகத்தில் ஒற்றுமை மேலும் வலுப்பெறட்டும். சமூகத்தின் முன்னேற்றத்திற்காக நாம் ஒன்றிணைந்து செயல்பட வேண்டியதன் அவசியத்தை இந்த நாள் மீண்டும் வலியுறுத்துகிறது.

இந்த புனித நாளில் நாம் மேற்கொள்ளும் பிரார்த்தனைகள் அனைத்தும் ஏற்றுக்கொள்ளப்பட்டு, உலகம் முழுவதும் அமைதியும் வளமும் நிலவ இறைவனை வேண்டுகிறேன். நம் நாட்டில் நல்லிணக்கம், சகிப்புத்தன்மை மற்றும் சமூக நீதி நிலைத்து, அனைவருக்கும் சமமான வாய்ப்புகள் கிடைக்கட்டும். அன்பும் அமைதியும் நிறைந்த ஈத் திருநாள் அனைவருக்கும் வளமும் நலனும் தரட்டும் என அதில் கூறப்பட்டுள்ளது.

## தருமபுரி மாவட்டத்தில்

# 100% வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கம்

### மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்.




தருமபுரி மார்ச் 21

தருமபுரி மாவட்டத்தில் சட்டசபை தேர்தலில் 100 % வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தை தருமபுரி மாவட்டம் பென்னாகரம் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் சதீஷ் துவக்கி வைத்தார். இந்த தேர்தலில் தவறாமல் வாக்களிப்பேன் என்றும், என் வாக்கு விற்பனைக்கல்ல என்றும் உறுதியளித்து வாக்களிப்பதன் முக்கியத்துவம் குறித்து பொதுமக்கள், கல்லூரி மாணவ, மாணவிகள் கையெழுத்திட்டனர். தொடர்ந்து தேர்தலில் 100 % வாக்களிப்போம், வலுவான ஜனநாயகத்தை உருவாக்குவோம் என்பது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் அமைக்கப்பட்ட செல்பி பாயிண்டை ஆட்சியர் பார்வையிட்டார்.

இந்த நிகழ்ச்சியில் அரசு துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## பிளஸ்2 மாணவி கொலை வழக்கு

# 10 நாட்களுக்குப் பிறகு உடல் உறவினர்களிடம் ஒப்படைப்பு



விளாத்திகுளம் அருகே வேடநத்தம் கிராமத்தில் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாகக் கொல்லப்பட்ட பிளஸ்2 மாணவியின் உடல், குற்றவாளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து 10 நாட்களுக்குப் பிறகு உறவினர்களி டம் ஒப்படைக்கப்பட்டது.கடந்த மார்ச் 10 ஆம் தேதி மாணவி, மர்ம நபர்களால் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். அவரது உடல் முட்புதரில் கண்டெடுக்கப்பட்ட நிலையில், குற்றவாளியைக் கைது செய்யும் வரை உடலைப் வாங்கபோவதில்லை எனப் பெற்றோர்களும் கிராம மக்களும் 9 நாட்களுக்கும் மேலாகத் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தச் சூழலில், தொழில்நுட்ப ஆதாரங்கள் மற்றும் சிசிடிவி காட்சிகள் மூலம் தர்ம முனீஸ்வரன் என்ற முக்கியக் குற்றவாளியைத் தனிப்படை போலீசார் அதிரடியாகக் கைது செய்தனர். குற்றவாளி கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து, மாணவியின் உடலைப் பெற்றுக்கொள்ளப் பெற்றோர்கள் சம்மதம் தெரிவித்தனர். தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் வைக்கப்பட்டிருந்த மாணவியின் உடல், இன்று காலை சட்டப்பூர்வ நடைமுறைகளுக்குப் பிறகு அதிகாரிகளால் பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டது. பலத்த பாதுகாப்புடன் மாணவியின் உடல்அவரதுசொந்தஊருக்குக்கொண்டு செல்லப்பட்டது. அங்கு இன்று மதியம் இறுதிச்சடங்குகள் செய்யப்பட்டு உடல் தகனம் செய்யப்படுகிறது. கிராமம் முழுவதும் சோகத்தில் மூழ்கியுள்ள நிலையில், அசம்பாவிதங்களைத் தவிர்க்க அந்தப் பகுதியில் போலீஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.



தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் தமிழ்நாடு சட்டமன்ற பொதுத்தேர்தல் 2026 வருகின்ற 23.4.2026 அன்று நடைபெற உள்ளது முன்னிட்டு இந்திய தேர்தல் ஆணையத்தால் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள 6 சட்டமன்ற தொகுதிகளுக்கும் நியமனம் செய்யப்பட்டுள்ள காவல் பார்வையாளர் ஹியர்மத் சுதிர் கல்பா இன்று தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள 24 மணி நேரமும் இயங்கக்கூடிய தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் செயல்பாடுகளை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் க.இளம் பகவத் முன்னிலையில் நேரில் பார்வையிட்டார்



பாளையங்கோட்டை முன்னாள் சேர்மன் மகாராஜா பிள்ளை அவர்களின் பேரன் சுந்தர் மகாராஜன் மற்றும் தூத்துக்குடியைச் சேர்ந்த ஓபிஎஸ் அணியின் ஆதரவாளரும் செயற்குழு உறுப்பினருமான ரமேஷ் , ஆகியோர் இருவரும் பாரதிய ஜனதா கட்சி தமிழக மாநிலத் தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் பாரதிய ஜனதா கட்சியில் இணைந்து கொண்டனர். இந்த நிகழ்வில் திருநெல்வேலி வடக்கு மாவட்ட தலைவர் முத்து பலவேசம் , தூத்துக்குடி தெற்கு மாவட்ட தலைவர் . சித்தரங்கநாதன் திருநெல்வேலி தெற்கு மாவட்ட தலைவர் தமிழ்ச்செல்வம் உடன் இருந்தனர்

### கோவையில்

# எச் எம் எஸ் சங்கம் சார்பில் முப்பெரும் விழா




கோவை மார்ச்:21

கோவை மாவட்டம் சிங்காநல்லூர் கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்க அலுவலகத்தில் என் ஜி ராமசாமி 115 வது பிறந்தநாள் விழா சர்வதேச மகளிர் தின விழா மற்றும் சங்கத்தின் நீண்ட கால பொதுச் செயலாளர் A சுப்பிரமணியம் 6வது நினைவு நாள் புகழஞ்சலி நிகழ்ச்சி HMS பேரவையின் மாநில செயல் தலைவர் டி எஸ் ராஜா மணி தலைமையில் குத்துவிளக்கேற்றி மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து தியாகி என் ஜி ராமசாமி நினைவு மேல்நிலைப்பள்ளி சிங்காநல்லூர் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஒண்டிப்புதூர் ஆண்கள், பெண்கள் மேல்நிலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் சென்ற ஆண்டு 2024 2025 கல்வி ஆண்டில் 10 மற்றும் 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் முதல் மூன்று இடங்களில் மதிப்பெண் பெற்று தேர்வாகியுள்ள 25 மாணவ மாணவியர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கப்பட்டது.

விழாவில் எச் எம் எஸ் மாநில செயலாளர் கே வீராசாமி வரவேற்புரை ஆற்றினார். எச் எம் எஸ் மாநில துணைத்தலைவர்கள் ஜி மனோகரன், ஆர் ரமணி, எஸ் துர்கா தேவி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கணேசன், ஜீவா சண்முகம், இளங்கோவன், முத்துச்சாமி, பழனிச்சாமி, முருகானந்தம், சரோஜா, பழனிச்சாமி ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

இதில் கோவை ஜில்லா பஞ்சாலை தொழிலாளர் சங்கம், கோவை மண்டல கட்டுமான தொழிலாளர் எச் எம் எஸ் சங்கம், தியாகி என் ஜி ஆர் எச் எம் எஸ் பொது தொழிலாளர் சங்கம் மற்றும் சங்க நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது

# விடுதலை சிறுத்தை கட்சியின் மாவட்ட துணை செயலாளர் ஆக செந்தில்குமார் நியமனம்



கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் சட்டமன்றத் தொகுதி மாவட்ட துணை செயலாளர் ஆக போச்சம்பள்ளி செந்தில்குமார் நியமிக்கப்பட்டுள்ளார் இவர் கட்சியின் மாநில தலைவர் திருமாவளவன் எம்பி அவர்களை சந்தித்து சால்வை அணிவித்து நன்றி தெரிவித்து ஆசி பெற்றார். அதனை தொடர்ந்து மண்டல துணைச் செயலாளர் ஜிம் மோகன், சட்டமன்றத் தொகுதி மாவட்ட செயலாளர் மாதையன், இளம் சிறுத்தை எழுச்சி பாசறை மாறிய செயலாளர் வழக்கறிஞர் சங்கத்தமிழ் சரவணன், மாநில துணைச் செயலாளர் முனி ராய், விடுதலை கட்சியின் தொழிலார் அணி பாநில செயலாளர் பழனி, ஒன்றிய செயலாளர் திருப்பதி மற்றும் கட்சியின் முக்கிய நிர்வாகிகளை சந்தித்து மாவட்ட துணை செயலாளர் செந்தில்குமார் சால்வை அணிவித்து ஆசி பெற்றார். உடன் கட்சி நிர்வாகிகள் ஏராளமான கலந்து கொண்டனர்

# ‘கேரள மக்கள் மாற்றத்திற்கு தயாராகிவிட்டனர்’ ராகுல் காந்தி



திருவனந்தபுரம், மார்ச். 21

தமிழ்நாடு, கேரளா, புதுச்சேரி, அசாம் மற்றும் மேற்கு வங்காளம் ஆகிய 5 மாநிலங்களுக்கான தேர்தல் தேதி, வாக்கு எண்ணிக்கை உள்ளிட்ட விவரங்களை தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. இதில், கேரளா (140 தொகுதிகள்) மற்றும் அசாம் (126 தொகுதிகள்) ஆகிய மாநிலங்களுக்கும், புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கும் (30 தொகுதிகள்) ஏப்ரல் 9ந்தேதி ஒரே கட்டத்தில் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இதற்கான வாக்கு எண்ணிக்கை மே 4ந்தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் வேட்பு மனு தாக்கல் தொடங்கி நடைபெற்று வரும் நிலையில், கேரளாவின் தர்மடம் சட்டமன்ற தொகுதியில் அந்த மாநிலத்தின் முதல்மந்திரி பினராயி விஜயன் தனது வேட்புமனுவை நேற்று தாக்கல் செய்தார். தர்மடம் தொகுதியில் அவர் 3வது முறையாக போட்டியிடுகிறார். இதற்கு முன்னர் அவர் குத்துப்பரம்பா தொகுதியில் மூன்று முறையும், பையனூரில் ஒரு முறையும் வெற்றி பெற்றிருந்தார்.

தர்மடம் தொகுதியில் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி (UDF) வி.பி.அப்துல் ரஷீத்தை வேட்பாளராக நிறுத்தியுள்ளது. அதே சமயம் பா.ஜ.க. கே.ரஞ்சித்தை தனது வேட்பாளராக அறிவித்துள்ளது. இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி சார்பில் 92 வேட்பாளர்களும், மற்ற இடங்களில் கூட்டணி கட்சிகளின் வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். நேற்றையை தினம் காங்கிரஸ் சார்பில் போட்டியிடும் 92 வேட்பாளர்களின் பட்டியல் வெளியிடப்பட்டது.

இந்த நிலையில், கேரள மக்கள் மாற்றத்திற்கு தயாராகிவிட்டனர் என காங்கிரஸ் முன்னாள் தலைவரும், வயநாடு எம்.பி.யுமான ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். இது தொடர்பாக ‘எக்ஸ்’ தளத்தில் அவர் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது ;

“ஐக்கிய ஜனநாயக முன்னணி அணி என்பது கேரள அணி. இந்த கூட்டணியின் ஒவ்வொரு வேட்பாளரும் கேரள மக்களின் குரலையும், விருப்பங்களையும், நம்பிக்கையையும் பிரதிபலிக்கிறார். இது அனுபவம் வாய்ந்த தலைவர்கள் மற்றும் மாற்றத்தை உருவாக்கும் இளைஞர்களின் கூட்டணி. தங்களது தொகுதிகளின் நுணுக்கங்களைப் புரிந்துகொண்ட வேட்பாளர்களைக் கொண்ட ஒரு வலிமையான அணி.

, கேரளம் என் வீடு, கேரள மக்கள் என் குடும்பம். அவர்கள் எனக்கு கற்றுக்கொடுத்த அனைத்திற்கும், அவர்கள் எனக்கு காட்டிய அன்புக்கும், அரவணைப்புக்கும், பாசத்திற்கும் நான் பெரிதும் கடமைப்பட்டுள்ளேன். நான் எப்போதும் உங்கள் கூட்டாளியாக இருப்பேன்.

கேரளாவின் செய்தி மிகத் தெளிவாக உள்ளது மக்கள் மாற்றத்திற்கு தயாராகிவிட்டனர். அவர்கள் மக்களின் குரலுக்கு செவிசாய்த்து, பிரச்சினைகளை புரிந்துகொண்டு, நேர்மையுடன் செயல்படும் ஒரு அரசாங்கத்தை விரும்புகிறார்கள்.

வரவிருக்கும் ஐக்கிய ஜனநாயக முன்னணி அரசாங்கத்துடன் இணைந்து, இந்த அழகான மாநிலத்திற்கு ஒரு சிறந்த எதிர்காலத்தை உருவாக்க உதவுவதற்காக நான் அனைத்தையும் செய்வேன். கேரளம் வெல்லும். ஐக்கிய ஜனநாயக முன்னணி வழிநடத்தும்.”

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# சென்னை அருகே 46 கிலோ தங்க கட்டிகள் சிக்கியது

## தேர்தல் பறக்கும் படை அதிரடி



சென்னை, மார்ச். 21

தமிழ்நாட்டில் ஏப்ரல் 23ந் தேதி சட்டசபை தேர்தல் நடைபெற இருக்கிறது. இதனால், தேர்தல் தேதி அறிவிக்கப்பட்ட, கடந்த 15ந் தேதி மாலை முதல் தேர்தல் நடத்தை விதிமுறைகளும் அமலுக்கு வந்தன. உடனடியாக, பறக்கும் படை சோதனையும் தமிழகம் முழுவதும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சென்னை மாதவரம் அருகே இன்று மதியம் தேர்தல் பறக்கும் படையினர் வாகன சோதனையில் ஈடுபட்டிருந்தபோது, சரக்கு வாகனம் ஒன்றில் 46 கிலோ எடை கொண்ட தங்க கட்டிகள் சிக்கின. இதன் மதிப்பு ரூ.64 கோடியே 17 லட்சம் ஆகும்.

இது குறித்து விசாரித்தபோது, சென்னை தியாகராயநகரில் உள்ள பிரபல நகைக் கடையில் இருந்து பொன்னேரியில் உள்ள நகைப்பட்டறைக்கு எடுத்துச் செல்வதாக டிரைவரும், அவருடன் வந்த ஊழியரும் கூறியுள்ளனர்.

இதுகுறித்துதேர்தல்ஆணையஉயர்அதிகாரிகளுக்கு தகவல்தெரிவிக்கப்பட்டு, 46கிலோதங்ககட்டிகளும் பறிமுதல் செய்யப்பட்டன. தங்க கட்டிகளுக்கான உரிய ஆவணத்தை காட்டினால், திருப்பி வழங்குவோம் என்று தேர்தல் ஆணைய அதிகாரிகள் தெரிவித்தனர். சென்னையில்ஒரேஇடத்தில்46கிலோ தங்க கட்டிகள் சிக்கியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### சென்னையில்

# சூப்பர் கிங்ஸுடன் மருத்துவக் கூட்டாளியாக இணையும் காவேரி மருத்துவமனை




சென்னை, மார்ச்21

காவேரிமருத்துவமனை, சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் அதிகாரப்பூர்வ மருத்துவக் கூட்டாளியாக இணைவதை அறிவித்துள்ளது.

இந்த கூட்டாண்மை யானது, விளையாட்டு மருத்துவப் பிரிவு மற்றும் விளையாட்டு வீரர்களின் சிகிச்சை பராமரிப்பை மேலும் வலுப்படுத்தும் காவேரி மருத்துவமனையின் வெற்றிகரமான பயணத்தில் ஒரு முக்கிய மைல்கல்லாக அமைகிறது.

மேம்பட்ட நோயறிதல், குறைந்தபட்ச மற்றும் சிறப்பான மறுவாழ்வு சிகிச்சை ஆகியவற்றை வழங்கும் நோக்கத்துடன், பிரத்யேக 'விளையாட்டு மற்றும் ஆர்த்ரோஸ்கோபிக் மையத்தை' இம்மருத்துவமனை தொடங்கியுள்ளது.

காயங்களிலிருந்து விரைவான மீட்சியையும் சிறப்பான செயல்திறனையும் இம்மையம் உறுதி செய்கிறது.

மைதானத்தில் அவசர கால உதவி, துல்லியமான நோயறிதல் முதல் மேம்பட்ட சிகிச்சை மற்றும் மறுவாழ்வு வரை முழுமையான பராமரிப்பை இந்த குழு உறுதி செய்கிறது.

சென்னை சூப்பர்கிங்ஸ் அணியின் அதிகாரப்பூர்வ சுகாதார கூட்டாளியாக, வீரர்களின் உடல்நலம், உடற்தகுதி மற்றும் உச்சக்கட்ட செயல்திறனை பேணுவதில் காவேரி மருத்துவமனை முக்கியப் பங்கு வகிக்கும். இதில் மேம்பட்ட நோயறிதல், காயத் தடுப்பு நெறிமுறைகள், உடனடி மருத்துவ உதவி, மற்றும் போட்டிகள் நடைபெறும் காலம் முழுவதும் தொடர்ச்சியான மருத்துவ சேவை ஆகியவை அடங்கும்.

இந்நிகழ்வில் பேசிய காவேரி மருத்துவமனை குழுமத்தின் இணை நிறுவனர் மற்றும் செயல் இயக்குநர் டாக்டர் அரவிந்தன்செல்வராஜ்கூறுகையில், “விளையாட்டு மருத்துவம் என்பது இன்று காயங்களுக்குச் சிகிச்சை அளிப்பது என்ற நிலையைக் கடந்து, துல்லியமான சிகிச்சை மற்றும் உச்சக்கட்ட செயல்திறனை மீட்டெடுப்பது என்பதாக வளர்ச்சி கண்டுள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் உடனான இந்தக் கூட்டாண்மை, விளையாட்டு வீரர்களுக்கு வேகம், துல்லியம் மற்றும் தொடர்ச்சியான பராமரிப்புடன் ஆதரவளிக்கும் எமது தயார் நிலையை வெளிப்படுத்துகிறது." என்று குறிப்பிட்டார்.

இந்த இணைப்பு குறித்து பேசிய சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தலைமைச் செயல் அதிகாரி கே.எஸ். விஸ்வநாதன் "எங்களைப் பொறுத்தவரை, ஒரு மருத்துவக் கூட்டாளரைத் தேர்ந்தெடுப்பது என்பது அடிப்படை சுகாதார ஆதரவு என்பதைத் தாண்டியதாகும். இதற்கு உயர் அழுத்த விளையாட்டுச் சூழல்களைக் கையாள்வதில் ஆழமான நிபுணத்துவமும் நிரூபிக்கப்பட்ட அனுபவமும் தேவை. திறனும் அனுபவமும் ஒருங்கிணைந்த கலவையே சென்னை சூப்பர் கிங்ஸ் அணிக்கு சரியான சுகாதார சேவை கூட்டாளியாக காவேரி மருத்துவமனையை ஆக்கியிருக்கிறது."

நகர அளவிலான பல மாரத்தான் போட்டிகள், டென்னிஸ் போட்டிகள் மற்றும் பிரீமியர் கிரிக்கெட் நிகழ்வுகளுக்கு மருத்துவ சேவை வழங்கிய விரிவான அனுபவம் காவேரி மருத்துவமனைக்கு உள்ளது. சென்னை சூப்பர் கிங்ஸ் அணியுடனான இந்த ஒத்துழைப்பு, சமூகங்கள் முழுவதும் உடற்தகுதி மற்றும் காயமில்லாத வாழ்க்கையை மேம்படுத்துவதற்கான காவேரி மருத்துவமனையின் பரந்த நோக்கத்தை மேலும் உறுதிப்படுத்துகிறது என்று கூறினார்.

### சென்னை தமிழ் தேசிய அரசியல் கூட்டமைப்பு சார்பில்

# சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம்



சென்னை, மார்ச் 21,

தமிழ் தேசிய அரசியல் கூட்டமைப்பு சார்பில் சட்டமன்ற தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் அறிமுக கூட்டம் சென்னை சேப்பாக்கம் சென்னை பத்திரிக்கையாளர் மன்றத்தில் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் கரு. சந்திரசேகரன் தலைமையில் நடைபெற்றது. இதில் 234 தொகுதிகளிலும் பிறமொழி கலப்பினம் இல்லாத தமிழர்களை வேட்பாளர்களாக நியமிப்பது என்பது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. நிகழ்ச்சியில் தமிழர் தன்னுரிமை கட்சி தலைவர் பாவலர் மூ.ராமச்சந்திரன், காந்தர்வகோட்டை தொகுதி வெ.மணிமேகலை, தர்மபுரி வன்னியர் வழக்கறிஞர் திருமுருகன். தமிழ் தேசிய அரசியல் கூட்டமைப்பு பொறுப்பாளர் ஏ.சி.ஜெயராஜ், சித்தர் வெள்ளைச்சாமி பாக்கியராஜ் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

### திருவெண்ணெய்நல்லூரில்

# என் வாக்கு என் உரிமை 100% வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி




திருவெண்ணெய்நல்லூர்.மார்ச்.21

சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு திருவெண்ணெ ய்நல்லூர் பி.டி.ஒ., அலுவலகத்தில் விழுப்புரம் மாவட்ட மகளிர் திட்டம் சார்பில் என் வாக்கு என் உரிமை என்னும் தலைப்பில் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது. பேரணிக்குவட்டாரஇயக்கம்மேலாளர் புவனேஸ்வரி தலைமை தாங்கினார். விழுப்புரம் நிதி உள்ளாக்கம் உதவி திட்ட அலுவலர் கமலவல்லி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பேரணியை தொடங்கி வைத்தார். பி.டி.ஒ., அலுவலகத்தில் தொடங்கிய பேரணி கடைவீதி வழியாக சென்று புதிய பேருந்து நிலையம் வரை சென்றடைந்தது. அப்போது வழி நெடுகிலும் 100 சதவீதம் வாக்களிக்க வலியுறுத்தி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தினர். இதில் மண்டல துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அருணாசலம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுந்தர்ராஜன், பிரபாகரன் உள்ளிட்ட மகளிர் திட்ட வட்டார ஒருங்கிணைப்பாளர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பெங்களூருவில் வணிக சிலிண்டர்கள் தட்டுப்பாடு; மத்திய மந்திரிக்கு சித்தராமையா கடிதம்

பெங்களூரு, மார்ச். 21

ஈரான் மீது அமெரிக்கா, இஸ்ரேல் ஆகிய நாடுகள் தாக்குதல் நடத்தி வருகின்றன. பதிலுக்கு ஈரானும் தாக்குதல் நடத்தி வருகிறது. குறிப்பாக அரபு நாடுகளில் உள்ள அமெரிக்காவின் ராணுவ நிலைகள் மீது ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. மேலும் ஹார்மூஸ் ஜலசந்தியை ஈரான் மூடிவிட்டது. இதனால் அந்த வழியாக எண்ணெய் சரக்கு கப்பல்கள் போக்குவரத்து தடைபட்டுள்ளது.

இதன் காரணமாக இந்திய எண்ணெய் கப்பல்களும் அங்கு சிக்கிக் கொண்டுள்ளன. இதனால்நாட்டில்சமையல்எரிவாயுசிலிண்டருக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. குறிப்பாக கர்நாடக மாநிலத்தின் தலைநகர் பெங்களூருவில் ஓட்டல்கள், உணவகங்கள், தங்கும் விடுதிகள் மற்றும் வணிக நிறுவனங்களுக்கான சிலிண்டர் வினியோகம் முற்றிலுமாக நிறுத்தப்பட்டுள்ளது.

பெங்களூருவில் சுமார் 50 ஆயிரம் ஓட்டல்கள், உணவகங்கள் இயங்கி வரும் நிலையில், இதுவரை சுமார் 25 ஆயிரம் ஓட்டல்கள் மற்றும் உணவகங்கள் மூடப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதனால் தினசரி உணவு தேவைக்காக ஓட்டல்களை நம்பியுள்ள மக்கள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். சில ஓட்டல்கள் விறகு அடுப்பு, மின்சார அடுப்புகள் மூலம் இயங்குகின்றன. சிலிண்டர் தட்டுப்பாடு காரணமாக ஓட்டல் தொழிலை நம்பி இருப்பவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வணிக சிலிண்டர்களின் விநியோகத்தை ஒழுங்குபடுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கர்நாடக முதல்மந்திரி சித்தராமையா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக மத்திய பெட்ரோலிய துறை மந்திரி ஹர்தீப் சிங் பூரிக்கு இன்று சித்தராமையா எழுதியுள்ள கடிதத்தில் கூறப்பட்டுள்ளதாவது;

"வீட்டு உபயோக சிலிண்டர்களின் விநியோகத்திற்கு முன்னுரிமை அளிக்குமாறு மத்திய பெட்ரோலிய துறை வழங்கிய வழிகாட்டுதல்களைத் தொடர்ந்து, வணிக சிலிண்டர்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது குறித்து மத்திய அரசு கவனத்தில் கொள்ள வேண்டும்.

இந்திய அரசால் வெளியிடப்பட்ட வழிகாட்டுதல்களுக்கு இணங்க, கர்நாடக அரசு இந்த சூழ்நிலையை சமாளிக்க, அத்தியாவசிய தேவைகளுக்கான சிலிண்டர் விநியோகத்தை ஒழுங்குபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளது. இருப்பினும், உணவகங்கள், தங்கும் விடுதிகள், உணவு வழங்கும் நிறுவனங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் உள்ளிட்டவற்றின் தேவை ஒரு நாளைக்கு 50 ஆயிரம் சிலிண்டர்களாக இருக்கும் பட்சத்தில், தற்போது ஆயிரம் சிலிண்டர்கள் மட்டுமே விநியோகம் செய்ய முடிகிறது.

இதன் விளைவாக, வணிக சிலிண்டர்கள் கிடைக்காமல் உணவு நிறுவனங்கள் மூடப்படுவது கணிசமாக அதிகரித்துள்ளது. இது மாணவர்கள், தகவல் தொழில்நுட்ப வல்லுநர்கள், விவசாயிகள், பால் உற்பத்தியாளர்கள் மற்றும் உணவு விநியோகத் துறையை சார்ந்துள்ள பொதுமக்களை பெரிதும் பாதிக்கிறது.

வீட்டுஉபயோகஎரிவாயுவிநியோகத்தைக் கண்காணிக்க ஏற்கனவே ஒரு தகவல் தொழில்நுட்ப அமைப்பு இருந்தாலும், வணிக சிலிண்டர் விநியோகத்தை கண்காணிக்க ஒருங்கிணைந்த தளம் எதுவும் இல்லை.

அதேபோல், பெங்களூருவின் நகர இணைப்பில் முக்கியப் பங்கு வகிப்பதோடு, பல ஓட்டுநர்களின் வாழ்வாதாரத்திற்கும் ஆதாரமாக விளங்கும் ஆட்டோக்களுக்கும், ஆட்டோ எல்.பி.ஜி. ஒரு இன்றியமையாத எரிபொருளாகும். இருப்பினும், ஆட்டோக்களுக்கான எல்.பி.ஜி. விநியோகத்தைக் கண்காணிக்க ஒருங்கிணைந்த அமைப்பு எதுவும் இல்லாததால், வெளிப்படைத்தன்மை மற்றும் பொறுப்புடைமை இல்லாமல் போகிறது.

மேற்கண்ட பிரச்சனைகளை கணிசமாகத் தணிக்கக்கூடிய 2 எரிவாயு டேங்கர்களை இந்தியா விரைவில் பெறவிருப்பதாக தகவல் தெரியவந்துள்ளது. எனவே, கர்நாடக மாநிலத்தின், குறிப்பாக பெங்களூரு நகரின் செயல்பாட்டுத் தேவைகளையும் தனித்துவமான சார்புநிலைகளையும் கருத்தில் கொண்டு, வணிக சிலிண்டர் மற்றும் ஆட்டோ எல்.பி.ஜி. ஆகியவை போதுமான அளவில் ஒதுக்கீடு செய்யப்படுவதை உறுதிசெய்ய வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன்."

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### விவசாயிகளுக்கு ஆதரவாக

# போராட்டத்தில் இறங்கிய நாம் தமிழர் கட்சி நிர்வாகி மரிய ஜெனிபர்



நாகர்கோவில் மார்ச் 21

விவசாயிகள்சங்கம் மற்றும் நீர்பாசன சங்கம் முன்னெடுத்த போராட்டத்தில் நாம் தமிழர் கட்சி சார்பில் மாநில நிர்வாகியும், கன்னியாகுமரி சட்டமன்ற தொகுதி வேட்பாளருமானமரியஜெனிபர் கலந்துகொண்டு விவசாயிகளுக்கு ஆதரவு தெரிவித்து கூறியதாவது:

குமரியின் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் தரமற்று அடிப்படை கட்டமைப்பு வசதிகள் கூட இல்லாத நிலையில் இருப்பதைப்பற்றி நாம் தொடர்ந்து பேசி வந்திருக்கிறோம். நமதுநெல்கொள்முதல்நிலையங்களில் நெல் மூட்டைகளை பாதுகாப்பாக தேக்கி வைக்க சரியான அறைகள் இல்லை. வெட்ட வெளியில் தார்ப்பாய்கள் மூலம் நெல் மூட்டைகள் மூடி வைக்கப்படுகிறது.

ஒரு நெல் கொள்முதல் நிலையத்தில் கூட நெல் உலர்த்தும் கருவி இல்லை. இதனால் இயற்கையாகவே ஈரப்பதம் மிக்க குமரி மாவட்டத்தில் நம் விவசாயிகளால் அரசு நிர்ணயிக்கும் ஈரப்பத அளவில் (17%) நெல்களை கொடுக்க முடிவதில்லை.

இந்நிலையில் குமரியில் கடந்த மூன்று நான்கு நாட்களாக பெய்துவரும் மழையால் நெல் மூட்டைகள் நனைந்து போயிருக்கிறது. இதனால் நெல்லின் ஈரப்பத அளவு அதிகரித்திருக்கிறது.

இதனால் கொள்முதல் அதிகாரிகள் சம்பந்தப்பட்ட விவசாயிகளே தங்கள் நெல்லை உலரவைத்து தரவேண்டும் என உத்தரவிட்டிருக்கின்றனர். சரியான மேற்கூரையும் இல்லாத, நெல் உலர்த்தும் கருவியும் இல்லாத நெல் கொள்முதல் நிலையத்தில் விவசாயிகளே நனைந்த தங்கள் நெல் மூட்டைகளை வெட்டவெளியில் பரப்பி உலர்த்தவேண்டிய அவல நிலை ஏற்பட்டுள்ளது.

மேலும் நெல் வியாபாரிகள் தங்கள் நெல்லை கொள்முதல் நிலையங்களிலே கொட்டி வைப்பதால் விவசாயிகளுக்கு நெல்லை உலர்த்துவதற்கான இடவசதிகள் கிடைப்பதில்லை. விவசாயிகள் தங்கள் ஆவணங்களை சமர்ப்பித்து தான் அப்பகுதியில் நெல் உலர்த்தும் இடங்களை பெறமுடியும் என்ற நிலையில் வியாபாரிகளை அதிகாரிகள் கையூட்டு பெற்றுக்கொண்டு எவ்வித முறையான ஆவணங்களும் இல்லாமல் அனுமதிப்பதால் விவசாயிகளுக்கு சரியான இடம் இல்லாமல் சாலைகளில் நெல்லை உலர்த்தும் நிலைக்கு தள்ளப்படுகின்றனர். மேலும் விவசாயிகள் ஒப்புதல் சீட்டு பெற வேண்டுமெனில் குறிப்பிட்ட உரங்களை வாங்கியாக வேண்டும் என்ற நிர்பந்தமும் அதிகாரிகளிடமிந்து தரப்படுகிறது.

நெல் மூட்டைகளை மழையிலிருந்து பாதுகாக்க வேண்டிய கொள்முதல் நிலையமும் அதன் அதிகாரிகளும், தாங்கள் செய்யவேண்டிய வேலையையும் பொறுப்பையும் விவசாயிகளின் தலைமேல் ஏற்றிவைப்பது அலட்சியமான நிர்வாக செயல்திறனற்ற நிலையை காட்டுகிறது.

கொள்முதல் நிலையத்தில் முறையான கூரைகொண்ட கட்டமைப்பு செய்யப்பட்டிருந்தால் நெல் மூட்டைகள் மழையில் நனைந்திருக்காது. கொள்முதல் நிலையங்களில் நெல் உலர்த்தும் கருவி இருந்திருந்தால் நெல்லின் ஈரப்பதத்தை எளிதில் குறைத்திருக்க முடியும் இந்த எளிய தீர்வுகளான இரண்டு அடிப்படை கட்டமைப்பு வசதிகளையும் செய்து கொடுக்காமல் விவசாயிகளை நிர்பந்தப்படுத்துவது மிகவும் கண்டிக்கத்தக்கது.

அரசின் இந்த விவசாயிகளுக்கு விரோதமான போக்கை கண்டித்து குமரியின் விவசாயிகள் போராட்டக்களத்தில் நிற்கின்றனர். இந்த போராட்டத்திற்கு நாம் தமிழர் கட்சி தொடர்ந்து களத்தில் தோளோடு தோளாக நின்று ஆதரவளிக்கும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்

# பாதிக்கப்பட்ட சிறுமியின் அடையாளத்தை சமூக வலைதளத்தில் வெளியிட்டால் கடும் நடவடிக்கை

## தூத்துக்குடி எஸ்.பி. எச்சரிக்கை






தூத்துக்குடி, மார்ச்.21

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் அருகே உள்ள வேடநத்தம் கிராமத்தைச் சேர்ந்த 12ம் வகுப்பு மாணவி, கடந்த 11ம் தேதி பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டுக் கிடந்தார். இந்தச் சம்பவம் தமிழகம் மட்டுமன்றி நாடு முழுவதும் அதிர்வலைகளை ஏற்படுத்தியது. பல்வேறு அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் இதற்கு கடும் கண்டனம் தெரிவித்தன. சம்பவம் நடந்து 9 நாட்கள் ஆகியும் குற்றவாளி கைது செய்யப்படாதது குறித்துப் பல்வேறு தரப்பினரும் கேள்வி எழுப்பி வந்தனர்.

இந்த நிலையில், நேற்று மாலை செய்தியாளர்களைச் சந்தித்த துத்துக்குடி மாவட்ட எஸ்.பி. மதன் வழக்கு விசாரணை குறித்து கூறிய விரிவான தகவல்கள் பின்வருமாறு:

குளத்தூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட இந்தச் சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்த 4 டி.எஸ்.பி.க்கள், 6 இன்ஸ்பெக்டர்கள் உள்பட 150 காவலர்கள் கொண்ட 10 தனிப்படைகள் அமைக்கப்பட்டன.

சம்பவ இடத்தில் சி.சி.டி.வி. கேமராக்கள் இல்லாத போதிலும், அப்பகுதியைச் சுற்றியுள்ள 98 இடங்களில் இருந்த கண்காணிப்பு கேமராக்கள் ஆய்வு செய்யப்பட்டன. மேலும் 2,514 தொலைபேசி அழைப்பு விவரங்கள் மற்றும் டிஜிட்டல் ஆவணங்கள் சேகரிக்கப்பட்டன. சுமார் 800க்கும் மேற்பட்டவர்களிடம் நேரடி விசாரணை நடத்தப்பட்டது. இதில் சந்தேகத்திற்குரிய 461 நபர்களிடம் டிஜிட்டல் மற்றும் நேரடி முறையிலான தீவிர விசாரணை மேற்கொள்ளப்பட்டது. கிராம மக்களிடம் பெறப்பட்ட தகவல்கள், டிஜிட்டல் ஆவணங்கள் மற்றும் அறிவியல் பூர்வமான ஆதாரங்களின் அடிப்படையில், இந்தச் சம்பவத்தில் தொடர்புடைய ஒரு நபரைத் தனிப்படையினர் நேற்று கைது செய்துள்ளனர். எவ்வித அழுத்தத்திற்கும் இடம் கொடுக்காமல், உயர் நீதிமன்றத்தின் கண்காணிப்பின் கீழ் இந்த விசாரணை நேர்மையாக நடத்தப்பட்டுள்ளது. இந்த சம்பவத்தில் தொடர்புடைய குற்றவாளிக்கு உச்சபட்ச தண்டனை பெற்றுத் தர காவல்துறை சார்பில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

பாதிக்கப்பட்ட சிறுமியின் பெயரையோ அல்லது புகைப்படத்தையோ சமூக வலைதளங்களில் பயன்படுத்துவது சட்டப்படி குற்றமாகும். இதுவரை அவ்வாறு பயன்படுத்திய 6 பேர் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது. இனிமேல் யாராவது சிறுமியின் அடையாளத்தை வெளியிட்டால், அவர்கள் மீது பிரிவு 23ன் கீழ் (POCSO Act) எஃப்.ஐ.ஆர். பதிவு செய்யப்பட்டு கடும் நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த சம்பவத்தைத் தொடர்ந்து, ஒவ்வொரு கிராமத்திலும் தலா 10 சி.சி.டி.வி. கேமராக்கள் பொருத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும், பெண் காவலர்கள் மூலம் கிராமங்களில் ரோந்துப் பணிகளைத் தீவிரப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.



கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையத்தில் 100% வாக்களிப்பதன் அவசியம் குறித்து 250சுய உதவிக்குழு பெண்கள்கலந்து கொண்ட விழிப்புணர்வு பேரணியை கிருஷ்ணகிரி மாவட்ட தேர்தல் அலுவலர் மாவட்ட ஆட்சித் தலைவர் துவக்கி பேருந்து பயணிகளுக்கு துண்டு பிரசுரங்களை வழங்கி பேருந்துகளில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்களை ஒட்டினார் இந்நிகழ்ச்சியில் ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் கவிதா, துணை காவல் கண்காணிப்பாளர் ராமச்சந்திரன் வட்டார வளர்ச்சி அலுவலர் , பாப்பி பிரான் சினா, சிவப்பிரகாசம், மகளிர் திட்ட உதவி அலுவலர்கள் பழனி மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்

# வர்த்தக சிலிண்டர் தாறுமாறாக விலை ஏற்றம் வீட்டு உபயோக சிலிண்டர் புக்கிங்கில் பிரச்சனை

## சமூக ஆர்வலர்கள் புகார்



திருப்பூர், மார்ச். 21

தேர்தல் நடத்தை விதிகள் அமலுக்கு வந்ததையடுத்து, ஆட்சியர் அலுவலகத்தில் மக்கள் மனுக்களை அளிப்பதற்கு, மனுக்கள் பெறப்படும் பெட்டி வைக்கப்பட்டுள்ளது. 2026 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தல் அட்டவணை வெளியிடப்பட்டு, தேர்தல் நடத்தை விதிகள் அமல்படுத்தப்பட்டன

திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் நுழைவு வாயில் வரவேற்பு பகுதியில் வைக்கப்பட்டுள்ள மக்கள் குறைதீர்வு மனுக்கள் பெறும் பெட்டியில் திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்க தலைவர் சமூக ஆர்வலர் ஈ.பி.அ.சரவணன் மனு அளித்துள்ளார்

அதில் எரிவாயு சிலிண்டர் விநியோகம் தடைபட்டுள்ளதால் வர்த்தக எரிவாயு சிலிண்டர்களின் வரத்து குறைவால் தாறுமாறாக விலை ஏறி உள்ளது

வீட்டுஉபயோகஎரிவாயுசிலிண்டர்களின் விநியோகமும் தடைபட்டுள்ள நிலையில் மொபைல் மூலமாக கேஸ் சிலிண்டர் புக் செய்யும் வசதி, தற்போது செயல்படவில்லை ஏஜென்சி நோக்கி செல்லும் நுகர்வோர்களுக்குமுறையாகபுக்செய்வதில்லை நுகர்வோர்களுக்கு அங்கு போதுமானஅடிப்படை வசதிகளை ஏற்படுத்தி உடனுக்குடன் புக்கிங் செய்வதை உறுதிசெய்ய வேண்டும்.

இந்நிலையில் மொபைல் மூலமாக கேஸ் சிலிண்டர் புக் செய்யும் வசதி, தற்போது செயல்படவில்லை என நுகர்வோர்கள் தரப்பில் தொடர்ச்சியாக புகார் அளிக்கப்பட்டு வருகின்றனர்.

ஒரு எரிவாயு சிலிண்டர் வாங்கிய பிறகு 21 நாட்கள் கழித்து மற்றொரு எரிவாயு சிலிண்டர் புக் செய்யும் வசதி செயல்பாட்டில் இருந்தது. இந்நிலையில் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால், இந்த கால அவகாசம் 25 நாட்களாக உயர்த்தப்பட்டது.

இந்நிலையில் தற்போது எரிவாயு சிலிண்டரை மொபைல் போன் மூலம் புக்கிங் செய்யும் வசதியும் தற்போது செயல்படவில்லை என பொதுமக்கள் சார்பில் புகார்கள் அதிகரித்து வருகின்றன. திருப்பூர் மாவட்டத்திலுள்ள பல்வேறு இடங்களில் சிலிண்டர் புக் செய்யும் வசதி தடைபட்டுள்ளது.

நுகர்வோர் பலரும் இலவச ஐவிஆர்எஸ் மொபைல் எண்ணை பயன்படுத்தி சிலிண்டர்களை புக் செய்வது வழக்கம். இந்நிலையில் தற்போது இந்த ஐவிஆர்எஸ் எண்களை அழைத்தால் எவ்வித பதிலும் இல்லாமல், அழைப்பு துண்டிக்கப்படுவதாக நுகர்வோர் சார்பில் புகார்கள் எழுந்து வருகின்றன.

ஏற்கனவே சிலிண்டர் தட்டுப்பாடு இருக்கும் சூழலில், தற்போது புதிதாக கேஸ் சிலிண்டர்களை புக் செய்ய முடியாமல் இருப்பதால் பொதுமக்கள் பலரும் செய்வதறியாமல் இருக்கின்றனர்.

இதன் காரணமாக சிலிண்டர் வாங்க, நுகர்வோர்கள் நேரடியாக சிலிண்டர் அலுவலகங்களுக்கு வரத் தொடங்கியுள்ளனர்.

ஆனால் எரிவாயு சிலிண்டர் ஏஜென்சி அலுவலகத்தில் நுகர்வோர்களின் அத்தியாவசிய தேவையான அமர இருக்கைக்கள், குடிநீர், கழிப்பிடம் போன்ற வசதிகள் போதுமானதாக இல்லாததால் நுகர்வோர்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகியுள்ளனர்.

மேலும் எரிவாயு சிலிண்டர் தட்டுப்பாட்டால் ஹோட்டல்கள் மற்றும் நுகர்வோர்கள் மட்டுமின்றி ஆட்டோ மற்றும் கார் ஓட்டுநர்களும் பாதிப்படைந்துள்ளனர்.

பெரும்பாலான பெட்ரோல் பங்குகளில் எரிவாயு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதால், அதிகாலை முதலே நீண்ட வரிசையில் ஆட்டோ மற்றும் கார் ஓட்டுநர்கள் காத்திருக்கின்றனர். எனவே வீட்டு உபயோக எரிவாயு சிலிண்டர்களின் விநியோகமும் தடைபட்டுள்ள நிலையில் மொபைல் மூலமாக கேஸ் சிலிண்டர் புக் செய்யும் வசதி, தற்போது செயல்படவில்லை ஏஜென்சி நோக்கி செல்லும் நுகர்வோர்களுக்கு முறையாக புக் செய்வதில்லை நுகர்வோர்களுக்கு அங்கு போதுமான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தி உடனுக்குடன் புக்கிங் செய்வதை உறுதி செய்ய வேண்டுமென திருப்பூர் நுகர்வோர் நல முன்னேற்ற சங்கம் சார்பாக கேட்டுக் கொள்கிறோம். இவ்வாறாக அதில் கூறப்பட்டுள்ளது.



திருவண்ணாமலை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.க.தர்ப்பகராஜ், இஆப., அவர்கள் இன்று (20.03.2026) தமிழ்நாடு சட்டமன்ற பொதுத் தேர்தல் 2026 நடைபெவுள்ளதை முன்னிட்டு திருவண்ணாமலை புதிய பேருந்து நிலையத்தில் வாக்காளர்களுக்கு தேர்தல் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் பயனிகளுக்கு வாக்காளர் விழிப்புணர்வு வாசகங்கள் அச்சிடப்பட்ட துண்டு பிரசுரங்களை வழங்கினார்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.